தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐப்பசி 16, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, நவம்பர் 2, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும்"

தன்னுயிர் தனக்கு மட்டுமே என்ற தன்னலச் செருக்கு நீங்கி, வாழ்ந்து மறைந்தோரை மண்ணுலகில் வாழும் அனைவரும் அவர்தம் பெருமைகளை உணர்ந்து போற்றித் தொழுவர்.

[*குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. எம். சண்முகம் அவர்கள் 14-5-1995 அன்றும், திரு. டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் அவர்கள் 17-6-1995 அன்றும், டாக்டர் இரா. நயினாமலை அவர்கள் 15-7-1995 அன்றும், திரு. மா. முத்துசாமி அவர்கள் 20-7-1995 அன்றும், திரு. கே. ஆர். நல்லசிவம் அவர்கள் 29-7-1995 அன்றும், திரு. அ. தேவேந்திரன் அவர்கள் 17-8-1995 அன்றும், திரு. ஆ. சு. ரவீந்திரன் அவர்கள் 1-9-1995 அன்றும், திரு. ஏ.ஆர். ராமசாமி அவர்கள் 6-9-1995 அன்றும், திரு. எஸ். பாண்டியராஜ் அவர்கள் 13-9-1995 அன்றும் மறைந்தது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சண்முகம் அவர்கள் *1962*–ஆம் ஆண்டு முதல் *1967*–ஆம் ஆண்டு வரையிலும், *1967*–ஆம் ஆண்டு முதல் *1971*–ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் *1971*–ஆம் ஆண்டு முதல் *1976*–ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் தொகுதியிலிருந்து தொடர்ந்து *3* முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

திரு. டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் அவர்கள் *1952*–ஆம் ஆண்டு முதல் *1957*–ஆம் ஆண்டுவரை அன்றைய சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரித் தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

டாக்டர் இரா. நயினாமலை அவர்கள் *1971*–ஆம் ஆண்டு முதல் *1976*–ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம், இராசிபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. மா. முத்துசாமி அவர்கள் *1967*–ஆம் ஆண்டு முதல் *1971*–ஆம் ஆண்டுவரை சேலம் மாவட்டம், நாமக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள். அக்கால கட்டத்தில் தமிழ்நாடு அமைச்சரவையிலும் அவர் பங்கேற்று, சீரிய பல பணிகளை ஆற்றியுள்ளார்.

திரு. கே. ஆர். நல்லசிவம் அவர்கள் *1952*–ஆம் ஆண்டு முதல் *1957*–ஆம் ஆண்டுவரை அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம், கொடுமுடித் தொகுதியிலிருந்தும், *1957*–ஆம் ஆண்டு முதல் *1962*–ஆம் ஆண்டு வரை மற்றும் *1962*–ஆம் ஆண்டு முதல் *1967*–ஆம் ஆண்டுவரை சென்னிமலைத் தொகுதியிலிருந்து இருமுறையும், *1967*–ஆம் ஆண்டு முதல் *1971*–ஆம் ஆண்டுவரை மொடக்குறிச்சித் தொகுதியிலிருந்தும், தொடர்ந்து நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு மிகச் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. அ. தேவேந்திரன் அவர்கள் *1971*–ஆம் ஆண்டு முதல் *1976*–ஆம் ஆண்டுவரை அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள்.

1995 நவம்பர் 2] [பேரவைத் தலைவர்]

திரு. ஆ. சு. ரவீந்திரன் அவர்கள் 1985-ஆம் ஆண்டு முதல் 1988-ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலைத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. ஏ.ஆர். ராமசாமி அவர்கள் 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டுவரை அன்றைய தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். பாண்டியராஜ் அவர்கள் 1960-ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 10-3-1960 முதல் 1-3-1962 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய அப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று
2 மணித்துளிகள் அமைதி காத்தனர்).

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) பஞ்சாப் மாநில முதல்வர் திரு. பியாந்த் சிங் அவர்கள் மறைவு

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சாப் மாநில முதல்வர் திரு. பியாந்த் சிங் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சரான திரு. பியாந்த் சிங் அவர்கள், 31-8-1995 அன்று தீவிரவாத வெறிக்குப் பலியான செய்தி அறிந்து, இப்பேரவை பெரும் அதிர்ச்சியடைந்துள்ளது.